DINAKARAN 25 JUNE 09



கோவை பூண்டி வெள்ளிங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையத்தில் தியான லிங்கம் பிரதிஷ்டை செய்து 10ம் ஆண்டு விழாவையொட்டி மத நல்லிணக்க தினம் நேற்று கொண்டாடப்பட்டது. தியான லிங்கம் முன்பு சர்வ மதத்தினர் பிரார்த்தனை செய்கின்றனர்.

# ஈஷா யோக மையத்தில் சர்வமத நல்லிணக்கநாள் விழா

கோவை,ஜுன்.25: கோவை பூண்டி வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் உள்ள ஈஷா யோகமையத்தில் அமைந்துள்ள தியானலிங்கத்தின் 10 ம் ஆண்டு பிரதிஷ்டை தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி காலை 6 மணிமுதல் மாலை 5.30 மணிவரை சர்வமத பிரார்த்தனை நடந்தது. இதில் பக்தர்கள் திரளாக பங்கேற்றனர். மாலையில் சமய நல்லிணக்க கருத்தரங்கு நடந்தது.

'கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா பேசுகையில்,' மனிதன் தன் உடலில் உள்ள ஏழு சக்கரங்களையும் தாண்டி செல்கிற போது இறைநிலையை உணர வாய்ப்பு ஏற்படுகிறது. அப்போது சிவம் என்கிற நிலை ஏற்படுகிறது. இது போன்ற பரவச நிலை குறித்து கவியரசு கண்ணதாசன் திருவருட்செல்வர் படத்தில் பாடல் எழுதியுள்ளார். தியானலிங்கம் அது போன்ற தியான அனுபவத்தை தரவல்லது. சர்வமதத்தினரும் தியான லிங்கம் ஒரே அனுபவத்தை தர வல்லது. ஆயிரம் கேள்விகளோடு செல்பவன் குருவின் முன்பு நிற்கும் போது சிந்தனையற்ற நிலையை அடைந்துவிடுவான். குருவின் கட்டுப்பாட்டில் சிஷ்யன் செல்வதால் இது நிகழ்ந்துவிடுகிறது. அது போன்ற நிலைதான் தியானலிங்கம் முன்பு அமரும் போதும் ஏற்படும். உண்மை பக்தன் இறைவன் மீது உள்ள அன்பின் காரணமாக எதையும் கேட்கமாட்டான்.

வீடு,மனை,காடு, பணம், பதவி, பொன் போன்றவை உண்மை பக்தனுக்கு பொருட்டல்ல என்றாலும் வீடுபேறு அடைவது அவனது குறிக்கோளாக இருக்கும். ஆனால் இறைவன் மீது அன்பு மிகும் போது வீடு பேறு என்பது கூட உண்மை பக்தனுக்கு மறந்து போய் ஒன்றும் கேட்காமல் நிற்பான். அதுதான் உண்மை பக்தி, என்றார். கோவை திவ்யோதயா பல்சமய உறவுமைய இயக்குனர் ஜாய்தாமஸ், பேச்சாளர் பர்வீன் சுல்தானா ஆகியோரும் பேசினர். முடிவில் டெல்லி சமீர்ராவ் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி நடந்தது.